# IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR

Date : 27.10.2025

SC. 202/2022

அ.சா 16 – முத்துகிருஷ்ணன் , காவல் துணை கண்காணிப்பாளர் , பருகூர் உட்கோட்டம , பருகூர்,

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ம் நாள் முத்துகிருஷ்ணன் என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துகிருஷ்ணன் | தந்தை பெயர் | ஆறுமுகம் |
| வயது | 59 | கிராமம் | பருகூர் |
| வட்டம் | பருகூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**
**முதல் விசாரணை : –**

1. நான் தற்போது காவல் துணை கண்காணிப்பாளராக கிருஷ்ணகிரி மாவட்டம் , பருகூர் உட்கோட்டத்தில் பணி செய்கிறேன். இதற்கு முன்பாக கடந்த 11.02.2020 ம் தேதி காலகட்டத்தில் காவல் ஆய்வாளராக ஒசூர் உட்கோட்டம் , சூளகிரி காவல் நிலையத்தில் , காவல் ஆய்வாளராக பணிசெய்து வந்தேன். கடந்த 11.02.2020 ம் தேதியன்று நான் சொந்த வேலையின் காரணமாக சிறு விடுப்பு சென்றிருந்த படியால் அன்றைய தினம் சூளகிரி காவல் நிலையத்தில் குற்ற எண் 59/2020 ச/பி 294 (பி) ,341 , 307 இதச பிரிவின் கீழ் பதிவு செய்து வைத்திருந்த காவல் உதவி ஆய்வாளர் திரு. பூபதி ராமராஜி என்பவர் மூலம் முதல் நிலை புலன் விசாரணை முடித்து வைத்திருந்த வழக்கு கோப்புகளை பெற்ற நான் கடந்த 15.02.2020 ம் தேதி இவ்வழக்கின் புகார்தாரரான சீனிவாசன் என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன் , அன்றைய தினமே பால்ராஜ் த/பெ அர்ஜீனன் என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு

செய்தேன். கடந்த 16.02.2020 ம் தேதியன்று இவ்வழக்கின் புகார் வாக்குமூலம் பதிவு செய்து சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ரவிச்சந்திரன் என்பவரையும் , முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் நிலை புலன் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு. பூபதிராமராஜ் என்பவரையும் சாட்சி செல்வம் த/பெ கோவிந்தன் என்பவரையும் விவாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் , கடந்த 27.05.2020 ம் தேதி புலன் விசாரணை தொடர்ச்சியாக சாட்சிகள் 1. சகாதேவன் 2. சக்திவேல் 3. கிருஷ்ணன் 4. யுவராஜ் காவல் உதவி ஆய் வாளர் ஆகியோர்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 05.06.2020 ம் தேதி ஒசூர் காவேரி மருத்துவமனை சென்று மருத்துவர் திரு. ஸ்ரீராமஜெயம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றை பெற்றேன். எனது புலன் விசாரணையில் சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட 2 வது எதிரியான பால்ராஜ் என்பவர் இவ்வழக்கின் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பதால் அவரது பெயரை நீக்கி , எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்தேன். அந்த எதிரி நீக்கல் அறிக்கை வேண்டுகோள் கடித்தத்துடன் ஆனது **அ.சா.ஆ 11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து , எதிரி கார்த்திக் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 341, 307 இதச வின் கீழ் குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நிகழ்நிலை புகார்தாரரை கடந்த 15.02.2020 ம் தேதி மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். மறு வாக்குமூலத்தில் நிகழ்நிலை புகார்தாரார் சம்பவம் நடந்ததின் பின்னர் , நான் சுய நினைவு இல்லாமல் இருந்ததால் பால்ராஜ் என்பவரின் பெயரை தவறுதலாக கொடுத்து விட்டதாக என்னிடம் தெரிவித்தார் என்றால் சரிதான். முரளி என்பவர் தான் அ.சா 1 ஐ சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு சென்றார் என்பதற்காக எந்த ஆவணத்திலும் குறிப்பு இல்லை என்றால் சரிதான். CCTV கிருஷ்ணகிரி நகைக்கடையிலும் , கிருஷ்ணகிரி டோல்கேட்டிலும் பார்வையிட்ட CCTV பதிவுகளை இந்த வழக்கில்

ஒரு ஆவணங்களை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அ.சா 1 கொடுத்து புகார் வாக்குமூலத்தில் BAJAJ PUISAR என்ற வாகனம் மூலம் சம்பவம் நடந்ததாக கூறப்பட்டுள்ள அந்த BAJAJ PUISAR வாகனத்தை இவ்வழக்கில் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்த போது அ.சா 1 ன் சகோதரர் செல்வம் என்பவர் எதிரியின் சகோதரர் சின்னதம்பி என்பவரை கொலை செய்து விட்டதாக எனது விசாரணையில் சாட்சிகள் தெரிவித்துள்ளார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்கள் ஒரு மாதம் கடந்து 13.03.2020 ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட காலதாமததிற்கு குறிப்பாக காரணம் எதுவும் இல்லை. வழக்கின் சம்பவத்தின் போது எதிரியும் அவரது குடும்பத்தார்களும் சூளகிரிக்கு அருகே உள்ள சப்படி கிராமத்தில் குடியிருந்தார் என்றாலும், ஆருப்பள்ளி என்ற ஊரில் குடியிருக்கவில்லை என்றாலும் சரிதான். அ.சா.பொ 1 ஆன கத்தியானது ஆருப்பள்ளியில் கைப்பற்றப்பட்டதாக கூறப்படட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா 1 ன் சகோதரர் செல்வம் என்பவர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக இவ்வழக்கின் எதிரி மீது அ.சா 1 பொய்யான காரணங்களுடன் கொடுத்த புகாரை பெற்று சரிவர விசாரிக்காமல் வழக்கு பதிவு செய்து அதனடிப்படையில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் இவ்வழக்கின் எதிரி மீது தவறுதலா குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. சம்பவத் தேதியில் ஆருப்பள்ளியில் குடியிருப்பு இல்லை என்றாலும் , சந்தேகத்தின் அடிப்படையில் தான் இவ்வாறு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur